4. தகவல் கோரல்

(அ) சென்னை, காசிமேடு பகுதி மீனவர்கள் ஆந்திரக் கடற்கொள்ளைக்காரர்களால் கடத்தப்பட்டது

***திரு. பரிதி இளம்வழுதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சென்னையிலே காசிமேடு, மாட்டாங்குப்பம், அயோத்தியாகுப்பம், நடுகுப்பம், ஊரூர்குப்பம், ஓடகுப்பம் போன்ற பகுதிகளிலே மீனவ மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் எல்லாம் கடலையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அந்த மக்கள் மத்தியிலே ஒருவிதமான அச்சம் பரவி இருக்கிறது. நேற்றைக்கு முன்தினம்கூட, மீன் பிடிக்கச் சென்ற நேரத்திலே ஆந்திரக் கடற்கொள்ளைக்காரர்களால் அவர்கள் கடத்தப்பட்டு, சிறை வைக்கப்பட்டு, அந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட பிறகு இங்கேயிருந்து பணம் எடுத்துச் சென்று கொடுத்து, அவர்களை மீட்டு வருகின்ற சூழ்நிலை இருக்கிறது. இது அடிக்கடி நடக்கிறது. நேற்றைக்கு முன்தினம்கூட 60 மீனவர்கள் அப்படிச் சிறைப்படுத்தப்பட்டார்கள்....*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கின்றீர்கள். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. ஆந்திர அரசோடு பேச்சுவார்த்தை நடப்பதாகக் கேள்விப்பட்டேன். அதனை திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளலாமா?*

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *அது, என்னுடைய இராயபுரம் தொகுதி. அது என்னுடைய தொகுதி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுபற்றிய முழு விவரத்தையும் திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளலாமா என்று கேட்கிறேன்.*

திரு. சி. ஞானசேகரன்: *தலைவர் அவர்களே...*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *அந்தப் பிரச்சினை முடிந்தது. மீனவர்கள் திரும்பி வந்துவிட்டார்கள். அது என்னுடைய தொகுதி, இராயபுரம் தொகுதி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.*

[2001 செப்டம்பர் 8

*மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமான பிரச்சினையில் மீனவர்கள் விடுதலை ஆகிவிட்டார்கள். இதுசம்பந்தமான முழு விவரங்களையும் திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதனை திங்கட்கிழமையன்று எடுத்துக்கொள்ளலாம்.

திரு. சி. ஞானசேகரன்: நானும் இதுகுறித்து கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான், திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளலாம்.

(ஆ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 35ன்கீழ்...

திரு. மு.பெ. சாமிநாதன்: ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து ஒரு வாரம் ஆகிறது. ஒரு விளக்கத்தைக் கேட்கிறேன், தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது ஆய்விலே இருக்கிறது. என்னுடைய அறைக்கு வாருங்கள் அங்கே பேசிக்கொள்ளலாம்.

திரு. மு.பெ. சாமிநாதன்: ஒரு விளக்கத்தைக் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, விளக்கமெல்லாம் இங்கே சொல்ல முடியாது.

5. கவன ஈர்ப்பு

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் எம்.சி.ஏ. அஞ்சல் வழிப் படிப்பிற்கு நுழைவுத் தேர்வு எழுதாமலே மாணவர்களைச் சேர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்.